வரையில் அங்கே பணியிலே இருந்து ஓய்வு பெற்றவர்களின் குடும்பத்திலே இருப்பவர்களுக்கு, அவர்கள் தகுதி படைத்தவர்களாக இருந்தால், அளிக்கவேண்டுமென்ற கொள்கையைக் கடைபிடித்துத்தான் அவர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பணியாளர்களுக்கு 300 ரூபாய் சம்பளம் தரப்படுவதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தச் சம்பளத்தையாவது இன்னும் கொஞ்சம் கூட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்டச் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பூர் துப்புரவுத் தொழிலாளர் குடியிருப்புகள்.

742—(*வினா எண். 2412) திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர்-தாராபுரம் ரோட்டிலுள்ள நகராட்சித் துப்புரவுப் பணித் தொழிலாளர் குடியிருப்புகள் இடிந்துவிழும் நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) மற்றும் (ஆ) திருப்பூர்-தாராபுரம் சாலையில் உள்ள துப்புரவுத் தொழிலாளர் குடியிருப்புகள் எதுவும் விழும் நிலையில் இல்லை. இருப்பினும் இக்குடியிருப்புகளுக்குத் தேவையான மராமத்து செய்வதற்கு ரூ. 41,000 மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு விரைவில் வேலை துவங்க உள்ளது.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நேரிலே வருவார்களானால், இடிந்து விழும் நிலையில் இருப்பதை நேரடியாக நான் காண்பிக்கத் தயாராக இருக்கிறேன். குறிப்பாக, நகரத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வெளியேறக்கூடிய சாக்கடை நீர் முற்றிலும் அங்கேதான் தேங்கியிருக்கிறது. அந்தத் துப்புரவுத் தொழிலாளர்களின் காலனியை ஒட்டியிருக்கிற தனியார்களுடைய இடத்திலே அந்தச் சாக்கடை நீர் வடிந்து ஓடுவதற்கு அவர்கள் அனுமதிக்காமல் அடைத்து விட்டார்கள். அதனால், மலங்களுடைய சாக்கடை நீரையும்,

மலத்தையும் அப்புறப்படுத்துவதையே ஜீவனமாகக் கொண்டிருக் கிற அந்தத் தொழிலாளர்களுடைய காலனிகளுக்குள்ளே சாக்கடை நீர் நிரந்தரமாகத் தேங்கிக் கொண்டிருக்கிறது. அதனால் அந்த வீடுகளின் அஸ்திவாரம் பாதிக்கப்பட்டுப் பல்வேறு வீடுகள் இடிந்து விழுகின்ற நிலைமையில் இருக்கின்றன. நான் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு சொல்கிறேன். அப்படி இடிந்து விழுந்து ஏதாவது உயிர்ச்சேதம் ஏற்படுமானால், அத்தகைய நிலையில் அறிக்கை வைப்பதைத் தவிர்த்து (மணியடிக்கப்பெற்றது)--- அதைஅரசாங்கம் கவனிக்கிற முறை யில், நேரடியாக அமைச்சர் பார்வையிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வீடுகளைப் பார்ப்பதற்கு ஒன்றும் சிரமம் இல்லை. திருப்பூர் வந்தால் பார்க்கலாம். ஆனால், என்னிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பின்படி 17 வீடுகள் இருக் கின்றன; மண் சுவர்களால் கட்டப்பட்டிருக்கின்றன; சுவரின் பின் பகுதிகள் எல்லாம் பழுதடைந்திருக்கின்றன என்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு கழிவுநீர் தேக்கத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. அதைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் அதற்கு என்ன வழி செய்யலாம் என்பதைப் பற்றிச் சொல்லலாம். அந்த வீடுகளைப் பொறுத்தமட்டில், அதைப் பழுது பார்ப்பதற்காக ரூ. 41,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வீடுகள் மண் சுவரால் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்கிறபொழுது, அவை 20 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டிருக்கின்றன என்ற முறையில் இடிந்து விழுகின்ற நிலையில் இருக்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்ள இயலும். எனவே, மாண்புமிகு அமைச்சரிடம் இருந்து நான் தெரிந்து கொள்ள விரும்புவது, திருப்பூர் நகராட்சிக்கு விசேஷமான கடன் உதவி செய்து ஒரு குறுகிய காலத்திற்குள் மாடி வீடுகளாக அந்தத் துப்புரவுத் தொழிலாளர்களுக்குக் கட்டித் தருகிற திட்டத்தை அரசு பரிசீலித்து ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆண்டுகளாயிற்று என்று சொன்னார் ; அது தவறு ; 30 ஆண்டுகள் ஆகிறது. என்றாலும் அந்த நகராட்சி நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தால் நிலம் கையகப் படுத்துவதற்கு விலை அதிகம் ஆகியிருக்கிறது—நிதிநிலை சரி யானதற்குப் பிறகு அதைப் பற்றி அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.

தலைஞாயிறு பேருந்து நிலையம்.

743—(*வினா எண். 6311) திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தலைஞாயிறு நகரப் பேருந்து நிலையத்திற்கென புதுக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. மா. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, தலைஞாயிறு பேரூராட்சி மன்றம் வறுமையில் வாடுகின்ற காரணத்தாலே, அங்கு நிதிப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தால் நிரந்தரமாக பஸ் ஸ்டான்ட் ஒன்று கட்ட முடியவில்லை. அரசு மானியமாகவோ அல்லது கடனாகவோ கொடுத்து அந்தப் பேரூராட்சிக்கு பஸ் நிலையம் கட்ட ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தலைஞாயிறு பேரூராட்சி நிதிநிலை சரியில்லையென்பது அரசுக்குத் தெரியும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனை எதுவும் தற்போது இல்லை.

திரு. வி. இரா. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் வேலூர் நகரப் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு ஓராண்டு ஆகிறது. பேருந்து கட்டிடத்திற்குள்ளே உள்ள கழிவறைகள், பிளாட்பார்ம்—தார் சாலைகள் சிதைந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே, கட்டிய ஒப்பந்தக்காரர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து தரப்படும்.

சென்னை நகரில் தனியார் தெருக்கள்.

744—(*வினா எண். 9112) திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—